# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No.33/2021 . நாள்.08.11.2023**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மாரியப்பன் | **வயது** | 62 |
| **த/பெ. க/பெ.** | கோவிந்தசாமி | **மதம்** | |
| **முகவரி** | திருவயலூர் | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.1 ஆஜர். 5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வழக்கு சொத்தானது நானும், 1ம் பிரதிவாதி கோவிந்தசாமியும் கிரயம் பெற்றோம் என்று சொன்னால் சரிதான். வழக்கில் நானும், 1ம் பிரதிவாதியும் வழக்கு சொத்தை பிரித்து கொள்ள பரிகாரம் கேட்கவில்லை. வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்ய 1ம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது. அதனால் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.